Council for Leather Exports
Sponsored by Ministry of Commerce & Industry, Government of India

**தோல் பொருட்கள் ஏற்றுமதி கவுன்சில்**
பதிவு அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம்:
எண்:1, சிவகங்கா சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 034.
மின்னஞ்சல்:cle@cleindia.com இணையதளம்: www.leatherindia.org

கோப்பு எண்.CLE-HO / PTLM / General / 2022-23 20 மே 2022

**பெறுனர்: தோல் பொருட்கள் ஏற்றுமதி கவுன்சில் -ன் அனைத்து உறுப்பினர்கள்**

அன்பார்ந்த ஐயா,

**பொருள்: தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் - இந்தியா-யுஏஇ & இந்தியா-ஆஸ்திரேலியா - தொடர்பான தகவல்களை பகிர்வது குறித்து**

நடப்பு நிதியாண்டில் சரக்குகள் மற்றும் சேவைகள் உட்பட வர்த்தக ஏற்றுமதிகளுக்கு யுஎஸ் டாலர் 400 பில்லியன் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த உயர்வான இலக்கை இந்தியா வெற்றிகரமாக எட்டி சாதித்திருப்பதை நாம் அனைவரும் அறிவோம். இதுவே இதுவரை எட்டப்பட்ட மிக உயர்ந்த இலக்காகும் மற்றும் 2018-19-ல் எட்டப்பட்ட முந்தைய சாதனை அளவான 330 பில்லியன் யுஎஸ் டாலர் என்பதனை நல்ல வித்தியாசத்தோடு அதனை விஞ்சிய சாதனையாக இது இருக்கிறது. தனது முக்கியமான வர்த்தக கூட்டாளி நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை விவாதித்து முடிவுசெய்கின்ற மிக முக்கிய பயணத்தை இந்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. இந்த குறிக்கோளை அடைவதற்காக, ஐக்கிய அரபு அமீரகத்துடன் (யுஏஇ) விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை மூலம் உருவாக்கி அதனை இறுதி செய்து அதில் கையொப்பமிட்டிருக்கிறது. இந்த பேச்சுவார்த்தை செயல்முறை 88 நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 10 ஆண்டு காலஅளவில் எந்தவொரு நாட்டிலும் கையொப்பமிடப்பட்டுள்ள விரிவான மற்றும் முழுமையான முதல் FTA என்பதாக இந்தியா - யுஏஇ-க்கு இடையிலான CEPA அமைந்திருக்கிறது. மேலும், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை (FTA) பொருளாதார ஒத்துழைப்பு வர்த்தக ஒப்பந்தம் (ECTA) என்ற பெயரில் இந்தியா இறுதி செய்திருக்கிறது. இதன் செயற்பரப்பு அம்சங்களை பொறுத்தவரை இவ்வொப்பந்தம் மிக விரிவான வீச்செல்லையை கருத்தில் கொண்டிருக்கிறது. இந்த கூட்டாண்மை நாடுகளுடன் வர்த்தகத்தின் அளவை விரிவாக்குவதற்கு ஒரு அமைப்பு ரீதியிலான இயங்குமுறையை இந்த ஒப்பந்தங்கள் வழங்குகின்றன.

FTA-களின் விவரங்களை பலரும் அறியுமாறு பகிர்வதற்கும், பல்வேறு பங்குதாரர்கள், வர்த்தக அமைப்புகள், EPCகள், வர்த்தக சங்கங்கள், தொழில்துறை உறுப்பினர்கள் போன்றவர்கள் மத்தியில் இவ்வொப்பந்தங்களின் செயற்பரப்பு மற்றும் சாத்தியமுள்ள நன்மைகள் மீது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், இந்திய அரசின் வர்த்தகத் துறை, நாடெங்கிலும் 8 நகரங்களில் மாநில அளவிலான அவுட்ரீச் திட்டங்களை நடத்துகிறது. நாடு முழுவதும் அத்தகைய ஒரு அவுட்ரீச் செயல்திட்டமானது, 10.05.2022 அன்று சென்னையில் நடத்தப்பட்டது. இதில், இந்திய அரசின் மாண்புமிகு நிதி மற்றும் கார்ப்பரேட் விவகார மத்திய அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், இந்திய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் திருமதி. அனுப்ரியா படேல், இந்திய அரசின் மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம், தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர். எல். முருகன், மற்றும் தமிழ்நாடு அரசின் குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட கிராமப்புறத் தொழில்கள், குறு சிறு நடுத்தர நிறுவனங்கள் மற்றும் ஊரக தொழில்துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. டி.எம்.அன்பரசன் ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் இந்திய அரசின் வர்த்தகத் துறையைச் சேர்ந்த DGFT-ன் உயர் அதிகாரிகள், சுங்கத்துறை, மாநில அரசின் அதிகாரிகள், EPCகள், வர்த்தக சபைகள், FIEO மற்றும் தோல் (லெதர்) மற்றும் காலணித் துறை உட்பட பல்வேறு தொழில்துறைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். CLE-ன் தலைவர், திரு. சஞ்சய் லீகா, CLE-ன் பிராந்திய தலைவர் (தெற்கு), திரு. M இஸ்ரார் அஹமது அவர்களோடு சேர்ந்து இத்துறையின் பங்கேற்புக்கு தலைமை ஏற்றார்.

…2/-

இந்திய அரசின் மாண்புமிகு நிதி மற்றும் கார்ப்பரேட் விவகார மத்திய அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின்படி PDF வடிவத்தில் தமிழ் மொழியில் கீழ்கண்ட ஆவணங்களை வினியோகிக்க திட்டமிடப்பட்டிருக்கிறது:

1. **இந்தியா-யுஏஇ CEPA மற்றும் இந்தியா-ஆஸ்திரேலியா ECTA மீது அடிக்கடி கேட்கப்படும் கேள்வி - பதில்களை உள்ளடக்கிய சிற்றேடு**

2. **இந்தியா-யுஏஇ CEPA மற்றும் இந்தியா-ஆஸ்திரேலியா ECTA மீது இந்திய அரசின் வெளிநாட்டு வர்த்தகத்தின் (DGFT) தலைமை இயக்குநர் திரு. சந்தோஷ் குமார் சாரங்கி அவர்களால் தயாரிக்கப்பட்டுள்ள PPT.**

3. **ஆஸ்திரேலிய அரசு வெளியிட்டுள்ள சிற்றேடு - 2035 வரை "இந்திய பொருளாதார செயல் உத்தி - சாத்தியத்திறனிலிருந்து வழங்கல் வரையிலான பயணம்" என்ற தலைப்பு மீது.**

4. **இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள "இந்தியா-ஆஸ்திரேலியா உறவுகள் மற்றும் ECTA மீதான கையேடு.**

மேற்குறிப்பிடப்பட்ட இந்த பயனுள்ள ஆவணங்களை தொழில்துறையைச் சேர்ந்த உறுப்பினர்களும் மற்றும் அனைத்து அக்கறை பங்காளர்களும் ஆர்வத்தோடு வாசித்து, இந்தியா - யுஏஇ CEPA மற்றும் இந்தியா - ஆஸ்திரேலியா ECTA ஒப்பந்தங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருளாதார ஆதாயங்களைப் பெற்று பயனடையுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறோம். இதன் மூலம், உங்களது உற்பத்தி, வர்த்தகம் மற்றும் ஏற்றுமதிகள் முன்னேற்றம் காணும் என்பது எங்களது நம்பிக்கை.

நன்றி மற்றும் வாழ்த்துக்களுடன்,

**இரா.செல்வம், ஐ.ஏ.எஸ்**
**செயலாக்க இயக்குனர்**
**தோல் பொருட்கள் ஏற்றுமதி கவுன்சில்**